(ஏழாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 73.]

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

### 2011, பெப்புருவரி 10, வியாழக்கிழமை, பி. ப. 1.00 மணிக்கு

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

0044/ '10

1.

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (4)

(அ) கடந்த ஐந்து வருடங்களாக,

(i) உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட அல்லது இறக்குமதி செய்யப்பட்ட அரிசி, சீனி, கோதுமை மா, பருப்பு, பால்மா, வெங்காயம் மற்றும் மிளகாய் போன்ற வர்த்தகப் பண்டங்களின் மொத்த அளவு யாதென்பதையும்,

(ii) மேற்படி பண்டங்கள் மீது விதிக்கப்பட்ட தீர்வை, பெறுமதிசேர் வரி, உற்பத்தி வரி யாதென்பதையும்,

(iii) மேற்படி (ii) இற்கமைய, தீர்வைகள், மற்றும் வரி மூலமாக ஈட்டப்பட்ட மொத்த வருமானம் யாதென்பதையும்

தனித்தனியாக அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், என்?

0534/ '10

2.

கௌரவ தயாசிறி ஜயசேகர,— பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கிழக்கு மாகாணத்தின், அக்கரைப்பற்று - சாகாமம் வீதியானது அபிவிருத்தி செய்வதற்காக உத்தேசிக்கப்பட்டுள்ளதொரு வீதியா என்பதையும்,

(ii) ஆமெனில், இவ்வீதி தற்போது அபிவிருத்தி செய்யப்படடு வருகின்றதா என்பதையும்

அவர் அறிவிப்பாரா?

(ஆ) இவ்வீதியில் அபிவிருத்திப் பணிகள் இடம்பெற்றுவருமாயின்,

(i) அதன் நீளம் எத்தனை கிலோ மீட்டர்கள் என்பதையும்,

(ii) இதன் பணிகளை முடிவுறுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள திகதியையும்,

(iii) இதற்காக மதிப்பிடப்பட்டுள்ள தொகை எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) இவ்வீதியின் நிர்மாணப் பணிகளுக்காக கேள்விப் பத்திரம் கோரப்பட்டதா,

(ii) ஆமெனில், கேள்விப்பத்திரங்களைச் சமர்ப்பித்த நிறுவனங்களின் பெயர்கள்,

(iii) அந்தந்த நிறுவனங்களால் சமர்ப்பிக்கப்பட்ட கேள்விப்பத்திர விலைகள்,

(iv) கேள்விப் பத்திரம் ஒப்படைக்கப்பட்ட நிறுவனம் மற்றும் குறித்த கேள்விப் பத்திரத் தொகை

என்பவற்றை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) (i) இவ்வீதியை நிர்மாணிப்பதற்காக மதிப்பீடு செய்யப்பட்ட மொத்தத் தொகை உள்நாட்டு நிதியங்களிலிருந்து பெறப்பட்டதா என்பதையும்,

(ii) இன்றேல் , வெளிநாட்டு உதவிகளிலிருந்து பெறப்பட்டதா என்பதையும்,

(iii) வெளிநாட்டு உதவி பெறப்பட்டிருப்பின், உதவி வழங்கிய நாட்டின் பெயர் யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

0621/ '10

3.

கௌரவ சுனில் ஹந்துனெத்தி,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) கல்வி அமைச்சின் செயலாளரது 2008/41 ஆம் இலக்க சுற்றறிக்கையின் மூலம் பாடசாலை பழைய மாணவர் சங்கம் மற்றும் பல்வேறு சங்கங்களினால் பாடசாலை மாணவர்களிடமும் பெற்றோர்களிடமும் சில காரணங்களைக் காட்டி நிதி வசூலிப்பது தடை செய்யப்பட்டுள்ளது என்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) அவ்வாறிருக்கையில், கொழும்பு றோயல் கல்லூரியின் பழைய மாணவர் சங்கம் 2010 Royal Parade எனும் பெயரில் ரூபா. 600.00 பெறுமதியான கட்டமிடப்பட்ட அட்டைகளை பிள்ளைகளுக்கும் பகிர்ந்தளித்து அதனூடாக நிதி வசூலிக்கின்றது என்பதை அவர் அறிவாரா?

(இ) குறிப்பிட்ட சுற்றறிக்கைக்கு முரணாக நிதி வசூலிக்கப்பட்டிருப்பின் இது தொடர்பாக மேற்கொள்ளப்படும் நடவடிக்கை யாதென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0625/ '10

4.

கௌரவ அசோக் அபேசிங்க,— தொழில்நுட்பவியல், ஆராய்ச்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) புத்தாக்குநர்கள் தமக்கு இழைக்கப்படுகின்ற அநீதிகள் தொடர்பாக இலங்கை புத்தாக்குநர் ஆணைக்குழுவுக்கு சமர்ப்பித்துள்ள முறைப்பாடுகள் தொடர்பாக அவர் அறிவாரா?

(ஆ) (i) புத்தாக்குநர்களான வர்த்தகர் செனெவிரத்ன, விரிவுரையாளர் ரிச்சட் நிக்கபிட்டிய மற்றும் கே.டி.பெரேரா என்போர் தமது ஆக்கங்கள் மோசடி செய்யப்பட்டுள்ளதாக மேற்கொள்ளும் கூற்றுக்கள் தொடர்பாக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை யாதென்பதையும்,

(ii) புத்தாக்குநர்கள், புத்தாக்குநர் ஆணைக்குழுவின் தலைவர் மற்றும் அதன் சில உத்தியோகத்தர்கள் தொடர்பாக மேற்கொண்டுள்ள எழுத்துமூலமான முறைப்பாடு தொடர்பாக முறையான விசாரணை நடத்தப்பட்டுள்ளதா என்பதையும்

அவர் குறிப்படுவாரா?

(இ) (i) புத்தாக்குநர் ஆணைக்குழுவின் தலைவரது தான்தோன்றித்தனமான செயற்பாடுகள் தொடர்பாக முறையானதொரு விசாரணையை நடத்துமாறு ஆக்கங்களின் கொள்ளையடிப்புக்கு உள்ளான புத்தாக்குநர்கள் சனாதிபதியிடம் எழுத்து மூலமாக கோரியுள்ளனர் என்பதையும்,

(ii) இந்த ஆணைக்குழுவுக்கு ஒருவருடத்திற்காக அரசாங்கம் வழங்கிய நிதி ஏற்பாடுகள் சிறியதொரு காலப்பகுதியினுள் செலவிடப்பட்டுள்ளதென்பதையும்

அவர் அறிவாரா?

(ஈ) மேற்படி ஆணைக்குழுவின் கணக்காய்வு அறிக்கைகளை அவர் இச்சபைக்கு முன்வைப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

0628/ '10

5.

கௌரவ அனுர திஸாநாயக்க,— கமத் தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இலங்கையிலுள்ள விவசாய ஆலோசகர்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்,

(ii) இவர்களின் ஆட்சேர்ப்பு நடைமுறை யாதென்பதையும்,

(iii) விவசாய ஆலோசகர் தரங்கள் மற்றும் அதற்குரிய தரங்களுக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்படுவதற்கான தகைமைகள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மாகாணங்களின் பிரகாரம் இருக்க வேண்டிய விவசாய ஆலோசகர்களின் எண்ணிக்கை தனித்தனியாக எத்தனையென்பதையும்,

(ii) ஊவா மாகாண சபைக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட விவசாய ஆலோசகர்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்,

(iii) விவசாய ஆலோசகர் பயிற்சிக்கும் விவசாய டிப்ளோமாதாரிகளுக்கும் இடையில் சம தன்மை காணப்படுகின்றதா என்பதையும்,

(iv) விவசாய ஆலோசகர் பயிற்சி தரத்திற்குத் தேவையான தகைமைகள் யாவை என்பதையும்,

(v) விவசாய டிப்ளோமாதாரிகளை விவசாய ஆலோசகர் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான ஒரு நடைமுறை உள்ளதாவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0861/ '10

6.

கௌரவ அஜித் குமார,— போக்குவரத்து அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) காலி - மாத்தறை புகையிரத வீதியை நிர்மாணிக்கும் கருத்திட்டத்திற்காக மதிப்பீடு செய்யப்பட்ட பணத்தொகை எவ்வளவென்பதையும்,

(ii) மேற்படி கருத்திட்டத்தின் மூலம் செயற்படுத்தப்படும் பணிகள் யாவையென்பதையும்,

(iii) இக்கருத்திட்டத்திற்கு நிதி வழங்கும் நாடு அல்லது நிறுவனம் யாதென்பதையும்,

(iv) வழங்கப்படும் அந்நிதி ஒரு கடனா அல்லது உதவியா என்பதையும்,

(v) அது ஒரு கடன் எனில், அதற்குரிய வட்டி, மீள செலுத்த வேண்டிய கால எல்லை மற்றும் நிபந்தனைகள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) மேற்படி கருத்திட்டம் தொடர்பாக,

(i) கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கைகளை இச்சபைக்கு சமர்ப்பிப்பாரா என்பதையும்,

(ii) நிறைவு செய்வதற்காக ஒப்படைக்கப்பட்ட ஒப்பந்தக்காரர்கள் யாரெனன்பதையும்,

(iii) ஆலோசகர்களாக பணியாற்றுவோர் யாவர் என்பதையும்,

(iv) மேற்பார்வை செய்யும் நிறுவனம் யாதென்பதையும்,

(v) நிறைவு செய்வதற்கு எதிர்பார்க்கப்படும் காலம் யாதென்பதையும்,

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) மேற்படி கருத்திட்டத்தின் துணை ஒப்பந்தக்காரர்களின் பெயர்கள், விலாசங்கள் மற்றும் இவர்களுக்குரிய துணை ஒப்பந்தப் பணியின் தன்மைகளும் அதன் பெறுமதிகளும் வெவ்வேறாக யாவையென்பதையும்,

(ii) இக்கருத்திட்டத்தில் இந்தியாவின் அல்லது வேறு நாட்டின் தொழிலாளர்கள் பணியில் அமர்த்தப்பட்டுள்ளார்களா என்தையும்,

(iii) ஆமெனில், இவர்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்

அவர் அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0880/ '10

7.

கௌரவ அஜித் பி. பெரேரா,— நீதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2007, 2008 மற்றும் 2009 ஆம் ஆண்டுகளுக்கான இலங்கை சட்டக் கல்லூரியின் மொத்த வருமானம் தனித்தனியே எவ்வளவென்பதையும்,

(ஆ) மேற்படி ஒவ்வொரு ஆண்டிலும்,

(i) விரிவுரைக் கட்டணமாக அறவிடப்பட்ட பணத் தொகை எவ்வளவென்பதையும்,

(ii) சட்டக்கல்லூரி அனுமதிப் பரீட்சைக்கான விண்ணப்பக் கட்டணமாக அறவிடப்பட்ட பணத் தொகை எவ்வளவென்பதையும்,

(iii) மேற்படி பரீட்சையின் பரீட்சைக் கட்டணமாக அறவிடப்பட்ட பணத் தொகை எவ்வளவென்பதையும்,

(iv) வேறு வழிகளில் இலங்கை சட்டக் கல்லூரிக்கு கிடைத்த வருமானம் எவ்வளவென்பதையும்,

(v) இலங்கை சட்டக் கல்லூரியின் செலவினம் எவ்வளவென்பதையும்

தனித்தனியாக அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) இலங்கை சட்டக் கல்லூரியின் நிதி முகாமைத்துவத்தை ஒழுங்கு முறைப்படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் எவை என்பதையும்,

(ii) 2009 ஆம் ஆண்டுக்கான நீதி, சட்ட மறுசீரமைப்பு அமைச்சின் முன்னேற்ற அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு விரிவுரைக்கட்டணங்களை அதிகரிக்காது இலங்கை சட்டக்கல்லூரியின் நடவடிக்கைகளைப் பேணிவர முடியாதாவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0432/ '10

8.

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) ஒரு நாட்டின் பணவீக்கத்தைக் கணிப்பிடும் அதிகாரசபை எதுவென்பதையும்,

(ii) இலங்கையில் கடந்த 15 வருடங்களில் வருடம் ஒன்றிற்கான பணவீக்க வீதம் எவ்வளவு என்பதையும்,

(iii) ஒவ்வொரு வருடத்தின் பணவீக்கத்திற்காகவும் ஏற்பாடு செய்த பின்னர், 1995 இல் இருந்த ரூபா 1,000 இன் இன்றைய உண்மைப் பெறுமானம் எவ்வளவு என்பதையும் (1995 இல் இருந்த ரூபா. 1000.00 இன் இன்றைய கொள்வனவுச் சக்தி)

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) நாட்டின் பொருளாதாரத்திற்கு பொறுப்பற்ற வழிகாட்டுதல்களை வழங்கப் பொறுப்பாகவிருந்த ஆட்களின் பெயர்களை அவர் குறிபப்பிடுவாரா?

(இ) இந்தியா, பாக்கிஸ்தான், மாலைதீவு, பூட்டான், நேபாளம், சிங்கப்பூர் மற்றும் மலேசியா போன்ற நாடுகளின் கடந்த 5 ஆண்டுகளுக்கான பணவீக்கம் எவ்வளவு என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், என்?

0536/ '10

9.

கௌரவ தயாசிறி ஜயசேகர,— பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கிழக்கு மாகாணத்தின், பொத்துவில் - பாணம வீதியானது அபிவிருத்தி செய்வதற்காக உத்தேசிக்கப்பட்டுள்ளதொரு வீதியா என்பதையும்,

(ii) ஆமெனில், இவ்வீதி தற்போது அபிவிருத்தி செய்யப்படடு வருகின்றதா என்பதையும்

அவர் அறிவிப்பாரா?

(ஆ) இவ்வீதியில் அபிவிருத்திப் பணிகள் இடம்பெற்றுவருமாயின்,

(i) அதன் நீளம் எத்தனை கிலோ மீட்டர்கள் என்பதையும்,

(ii) இதன் பணிகளை முடிவுறுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள திகதி யாதென்பதையும்,

(iii) இதற்காக மதிப்பிடப்பட்டுள்ள தொகை எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) இவ்வீதியின் நிர்மாணப் பணிகளுக்காக கேள்ளிப் பத்திரம் கோரப்பட்டதா என்பதையும்,

(ii) ஆமெனில், கேள்விப்பத்திரங்களைச் சமர்ப்பித்த நிறுவனங்களின் பெயர்கள் யாவை என்பதையும்,

(iii) அந்தந்த நிறுவனங்களால் சமர்ப்பிக்கப்பட்ட கேள்விப்பத்திர விலைகள் யாவையென்பதையும்,

(iv) கேள்விப் பத்திரம் ஒப்படைக்கப்பட்ட நிறுவனம் மற்றும் குறித்த கேள்விப் பத்திரத் தொகை யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) (i) இவ்வீதியை நிர்மாணிப்பதற்காக மதிப்பீடு செய்யப்பட்ட மொத்தத் தொகை உள்நாட்டு நிதியங்களிலிருந்து பெறப்பட்டதா என்பதையும்,

(ii) இன்றேல் , வெளிநாட்டு உதவிகளிலிருந்து பெறப்பட்டதா என்பதையும்,

(iii) வெளிநாட்டு உதவி பெறப்பட்டிருப்பின், உதவி வழங்கிய நாட்டின் பெயர் யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

0874/ '10

10\.

கௌரவ அஜித் குமார,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2008, 2009 மற்றும் 2010 ஆம் ஆண்டுகளில் இலங்கை ஈரானிடமிருந்து பெற்றுக்கொண்ட கடன்தொகை வருடாந்த அடிப்படையில் வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்,

(ii) மேற்கூறப்பட்ட வருடங்களில் ஈரான், ஐக்கிய அமெரிக்கா ஆகிய நாடுகளிலிருந்தும் சர்வதேச நாணய நிதியம், ஆகிய அபிவிருத்தி நிதியம் ஆகிய நிறுவனங்களிலிருந்தும் பெறப்பட்ட கடன்கள் எந்தக் கருத்திட்டங்களில் இடப்பட்டன என்பதையும்,

(iii) மேற்படி ஒவ்வொரு கருத்திட்டத்துக்கும் இடப்பட்ட நிதித்தொகை வெவ்வேறாக யாது என்பதையும்,

(iv) மேற்படி கடன்தொகையில் கருத்திட்டங்களில் இடப்படாத தற்போது திறைசேரியில் உள்ள தொகை எவ்வளவு என்பதையும்,

(v) மேலே அ (ii) இல் குறிப்பிடப்பட்ட ஒவ்வொரு நிறுவனத்துக்கும் அல்லது நாட்டுக்கும் செலுத்தவேண்டியுள்ள கடன்தொகை வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்,

(vi) மேற்படி கடன்தொகையைச் செலுத்துவதற்கு வழங்கப்பட்டுள்ள காலம் யாது என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

0881/ '10

11\.

கௌரவ அஜித் பி. பெரேரா,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) சட்டமா அதிபர் திணைக்களத்திலுள்ள,

(i) அரச சட்டவாதிகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்,

(ii) அரச சட்டத்தரணிகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) சட்டமா அதிபர் திணைக்களத்தின் பொறுப்புக்களை தாமதமின்றி வினைத்திறனுடன் பேணிவருவதற்குத் தேவையான அரச சட்டவாதிகளின் எண்ணிக்கையும் அரச சட்டத்தரணிகளின் எண்ணிக்கையும் தனித்தனியே எவ்வளவென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) சட்டமா அதிபர் திணைக்களத்தில் உள்ள வெற்றிடங்களை நிரப்புவதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் எவை என்பதை அவர் அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0540/ '10

12\.

கௌரவ தயாசிறி ஜயசேகர,— பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) கிழக்கு மாகாணத்தின், திருகோணமலை - திருக்கொண்டியாடுமடு வீதியானது அபிவிருத்தி செய்வதற்காக உத்தேசிக்கப்பட்டுள்ளதொரு வீதியா என்பதையும்,

(ii) ஆமெனில், இவ்வீதி தற்போது அபிவிருத்தி செய்யப்படடு வருகின்றதா என்பதையும்

அவர் அறிவிப்பாரா?

(ஆ) இவ்வீதியில் அபிவிருத்திப் பணிகள் இடம்பெற்றுவருமாயின்,

(i) அதன் நீளம் எத்தனை கிலோ மீட்டர்கள் என்பதையும்,

(ii) இதன் பணிகளை முடிவுறுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள திகதி யாது என்பதையும்,

(iii) இதற்காக மதிப்பிடப்பட்டுள்ள தொகை எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) இவ்வீதியின் நிர்மாணப் பணிகளுக்காக கேள்ளிப் பத்திரம் கோரப்பட்டதா என்பதையும்,

(ii) ஆமெனில், கேள்விப் பத்திரங்களைச் சமர்ப்பித்த நிறுவனங்களின் பெயர்கள் யாவை என்பதையும்,

(iii) அந்தந்த நிறுவனங்களால் சமர்ப்பிக்கப்பட்ட கேள்விப் பத்திர விலைகள் யாவையென்பதையும்,

(iv) கேள்விப் பத்திரம் ஒப்படைக்கப்பட்ட நிறுவனம் மற்றும் குறித்த கேள்விப் பத்திரத் தொகை யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) (i) இவ்வீதியை நிர்மாணிப்பதற்காக மதிப்பீடு செய்யப்பட்ட மொத்தத் தொகை உள்நாட்டு நிதியங்களிலிருந்து பெறப்பட்டதா என்பதையும்,

(ii) இன்றேல், வெளிநாட்டு உதவிகளிலிருந்து பெறப்பட்டதா என்பதையும்,

(iii) வெளிநாட்டு உதவி பெறப்பட்டிருப்பின், உதவி வழங்கிய நாட்டின் பெயர் யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

0599/ '10

13.

கௌரவ ரவி கருணாநாயக்க,— விளையாட்டுத் துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) எதிர்வரும் மூன்று வருடங்களுக்கான,

(i) இலங்கை கிரிக்கட் குழுவிற்கான ஏற்பாடுகளையும்,

(ii) இலங்கை கிரிக்கட் குழு விஜயம் செய்யவிருக்கும் நாடுகளின் பெயர்களையும் இலங்கைக்கு வருகைதரும் நாடுகளின் பெயர்களையும் ,

(iii) விளையாடப்படவிருக்கும் ரெஸ்ட் மற்றும் ஒருநாள் பந்தயங்களின் எண்ணிக்கையையும்,

(iv) எதிர்பார்க்கப்படும் வருமானம், ஏற்படவிருக்கும் செலவினம் ஆகியவற்றையும்

அவர் இச்சபைக்கு தெரிவிப்பாரா?

(ஆ) (i) "இலங்கை கிரிகெட்டின்" மாதமொன்றிற்கான மொத்த செலவையும்,

(ii) "இலங்கை கிரிகெட்டில்" பணியாற்றும் ஆட்களின் பெயர் நிரலையும், அதில் மாதாந்தம் ரூபா 50,000.00 இற்கு மேல் சம்பளம் அல்லது உபகாரம் பெறுவோரின் பெயர்களையும்,

(iii) "இலங்கை கிரிகெட்டின்" மாதமொன்றிற்கான செலவையும்

அவர் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், என்?

## அனுதாபப் பிரேரணை

1.

காலஞ்சென்ற முன்னாள் அமைச்சரும் பாராளுமன்ற உறுப்பினருமான கௌரவ பி. சந்திரசேகரன்.

---

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## சட்டமூல சமர்ப்பண முன்னறிவித்தல்

1.

தொழில், தொழில் உறவுகள் அமைச்சர்,— ஊழியர் சகாய நிதியம் (திருத்தம்),— 1958 ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க, ஊழியர் சகாய நிதியச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்.

## பிரேரணை முன்னறிவித்தல்கள்

2.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அமர்வு (இல.1),— 7 ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளினாலும் 2010.07.09 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரேரணையினாலும் தடைபெறாமல் இன்றைய தினம் சபை அமர்வு நேரம் பி.ப. 1.00 மணி முதல் பி.ப. 6.30 மணிவரை இருக்குமாக. பி.ப. 6.30 மணிக்கு சபாநாயகர் பாராளுமன்றத்தை வினாவின்றி ஒத்திவைப்பாராக.

3.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அமர்வு (இல.2),— இப்பாராளுமன்றம் இன்று அதன் அமர்வு கலையும் போது 2011 பெப்புருவரி மாதம் 23 ஆம் திகதி புதன்கிழமை பி.ப. 1.00 மணி வரை ஒத்திவைக்கப்படுமாக.

4.

கௌரவ (செல்வி) கமலா ரணதுங்க,— சட்டமூலம் கொண்டுவர அனுமதி (இல.1),— பின்வரும் சட்டமூலம் கொண்டுவர அனுமதி வழங்கப்படுமாக.

"ஹேதன் கல்வி மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்"

5.

கௌரவ ஹுனைஸ் பாறூக்,— சட்டமூலம் கொண்டுவர அனுமதி (இல.2),— பின்வரும் சட்டமூலம் கொண்டுவர அனுமதி வழங்கப்படுமாக:-

"தற்காப்புக் கலைகளுக்கான நிறுவகத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்"

---

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

* 1.

பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர்,— இலங்கைத் தேயிலைச் சபைச் சட்டத்தின் கீழ் ஒழுங்கு விதிகள்— "1975 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, இலங்கைத் தேயிலைச் சபைச் சட்டத்தில் 5 (ஆ) மற்றும் 5 (இ) ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச் சட்டத்தில் 25 ஆம் பிரிவின் கீழ் இலங்கைத் தேயிலைச் சபையினால் ஆக்கப்பட்டு, பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்டு, 2010, ஒற்றோபர் மாதம் 27 ஆம் திகதிய 1677/14 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும், 2011.01.04 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* 2.

காணி, காணி அபிவிருத்தி அமைச்சர்,— உரித்துப் பதிவுச் சட்டத்தின் கீழ் ஒழுங்கு விதிகள், — 1998 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, உரித்துப் பதிவுச் சட்டத்தின் 60 ஆம் 62 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 67 ஆம் பிரிவின் கீழ் காணி, காணி அபிவிருத்தி அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2009 ஓகத்து மாதம் 24 ஆந் திகதிய 1616/23 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2010.05.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 3.

உள்ளூர் அதிகாரசபைகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (2011, சனவரி 04) [1].

* 4.

உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் (திருத்தச்) சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (2011, சனவரி 04) [1].

5.

மகேஸ்வரி மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

6.

இலங்கை செமட்ட செத மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

7.

பின ஒழுங்கமைப்பு (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.

---

[1] "சட்டமூலம் இப்பொழுது இரண்டாம் முறையாக மதிப்பிடப்பெறுமாக" எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.